விடுமுறைக்கு ஆசைப்பட்டு பள்ளிக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுத்த மாணவர்கள்

ஈரோடு, செப். 4: விடுமுறைக்கு ஆசைப்பட்டு தனியார் பள்ளிக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுத்த மாணவர்கள் இருவரை போலீஸார் பிடித்து எச்சரிக்கை செய்து விடுவித்தனர்.

ஈரோடு பூந்துறை சாலையில் உள்ள தனியார் மெட்ரிக். பள்ளியில் 2500க்கும் மேற்பட்ட மாணவர்கள் படித்து வருகின்றனர். இந்தப் பள்ளியின் மின்னஞ்சல் முகவரிக்கு வந்த வெடிகுண்டு மிரட்டலால் கடந்த 2-ஆம் தேதி பள்ளிக்கு விடுமுறை விடப்பட்டது. பள்ளி வளாகம் முழுவதும் போலீஸார் தீவிர சோதனையில் ஈடுபட்ட நிலையில் அது புரளி என்பது தெரியவந்தது.

இந்நிலையில், வெடிகுண்டு மிரட்டல் வந்த மின்னஞ்சல் முகவரியை ஆய்வு செய்தபோது அதே பள்ளியில் பயின்று வரும் 9-ஆம் வகுப்பைச் சேர்ந்த இரு மாணவர்கள் அனுப்பியது தெரியவந்தது.

இதைத் தொடர்ந்து மாணவர்களைப் பிடித்த போலீஸார் பள்ளி நிர்வாகித்தனர், மாணவர்கள் மற்றும் பெற்றோரிடம் செவ்வாய்க்கிழமை இரவு வரை விசாரணை நடத்தினர். இந்த மாணவர்கள் வேறு பள்ளியில் இருந்து புதிதாக வந்து சேர்ந்ததும், பள்ளி பிடிக்காததால் விடுமுறைக்காக வெடிகுண்டு மிரட்டல் விடுத்ததும் தெரியவந்தது. இதையடுத்து, பெற்றோரை பள்ளிக்கு அழைத்து, அவர்கள் முன்னிலையில் மாணவர்கள் இருவருக்கும் போலீஸ் தரப்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டது. இதுபோன்ற செயலில் மீண்டும் ஈடுபட்டால் சட்ட நடவடிக்கைக்கு ஆளாக நேரிடும் என அறிவுறுத்தி அனுப்பிவைத்தனர்.

பூமி பூஜை...

பல்லடம் அருகே பொங்கலூர் சக்தி நகர் எஸ்.பி.வி. கார்டனில் ரூ. 28 லட்சம் மதிப்பில் தார் சாலை அமைப்பதற்காக புதன்கிழமை நடைபெற்ற பூமி பூஜையில் பங்கேற்ற ஒன்றியக் குழு தலைவர் எஸ்.குமார், ஊராட்சித் தலைவர் சத்யா பாலசுப்பிரமணியம், துணைத் தலைவர் ராதாகிருஷ்ணன் உள்ளிட்டோர்.

சாலை பாதுகாப்பு ஆய்வுக் கூட்டம்

திருப்பூர், செப். 4: சாலை பாதுகாப்பு குறித்த மாதாந்திர ஆய்வுக் கூட்டம் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் புதன்கிழமை நடைபெற்றது.

கூட்டத்துக்கு தலைமை வகித்து மாவட்ட ஆட்சியர் தா.கிறிஸ்துராஜ் பேசியதாவது:

முதல்வர் மு.க.ஸ்டாலின், விபத்தில்லா தமிழகத்தை உருவாக்கும் வகையில் சாலைப் பாதுகாப்பு குறித்து பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள அறிவுறுத்தியுள்ளார். அதனடிப்படையில் பொது மக்களிடையே சாலை விதிகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி, விபத்துகளைத் தவிர்க்கும் நோக்கில் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் தொடர்ச்சியாக பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குறிப்பாக, விபத்துக்கான காரணங்களாக இருசக்கர வாகனங்களில் ஓட்டுநர் மற்றும் பின்னால் அமர்ந்து இருப்பவர் இருவரும் தலைக்கவசம் அணியாதது, வாகனம் ஓட்டும்போது கைப்பேசியைப் பயன்படுத்துவது, கார் போன்ற 4 சக்கர வாகனங்களில் சீட்பெல்ட் அணியாதது போன்ற விதிமீறல்களை தவிர்க்க வலியுறுத்தி சாலைகளின் முக்கிய இடங்களில் விழிப்புணர்வு பதாகைகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றார். முன்னதாக, சட்டம்-ஒழுங்கு பராமரிப்பு குறித்த ஆய்வுக் கூட்டமும் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், மாநகராட்சி ஆணையர் பவன்குமார் ஜி.கிரியப்பனவர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அபிஷேக் குப்தா, மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன், மாவட்ட வன அலுவலர் தேவேந்திரகுமார் மீனா, மாநகர துணை காவல் ஆணையர்கள் கிரிஷ் யாதவ், சுஜாதா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

சேவூர் வாலீஸ்வரர் கோயில் கும்பாபிஷேகம்: முதல்கால யாகவேள்வி தொடக்கம்

அவிநாசி, செப். 4: சேவூர் வாலீஸ்வரர் கோயில் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு முதல் கால யாக வேள்வி புதன்கிழமை இரவு நடைபெற்றது.

கொங்கு ஏழு சிவஸ்தலங்களில் வைப்புத் தலமாகவும், நடுச்சிதம்பரம் என்றும் அழைக்கப்படும் சேவூர் அறம்வளர்த்த நாயகி உடனமர் ஸ்ரீ வாலீஸ்வரர் கோயில் 1,000 ஆண்டுகள் பழைமையானது.

இக்கோயில் மகா கும்பாபிஷேகம் செப்டம்பர் 6-ஆம் தேதி (வெள்ளிக்கிழமை) காலை 7.45 மணிக்கு நடைபெறுகிறது. இதை முன்னிட்டு புதன்கிழமை மாலை முதல் கால யாக பூஜை தொடங்கியது. இதில், அவிநாசி வாகீசர் மடாலயம் காமாட்சிதாச சுவாமி, கூனம்பட்டி சரவண ராஜமாணிக்க சுவாமி, பெங்களூரு ஸ்ரீஸ்ரீ குருகுல வேதாகம பாடசாலை முதல்வர் ஸ்ரீ சுந்தரமூர்த்தி சிவம் ஆகியோர் பங்கேற்று அருளுரை வழங்கினர். இதைத் தொடர்ந்து வியாழக்கிழமை மாலை வரை மூன்று கால யாக வேள்வி நடைபெறுகிறது.

முக்கிய நிகழ்ச்சியாக வெள்ளிக்கிழமை அதிகாலை 4-ஆம் கால யாக பூஜையும், காலை 7.45 மணிக்கு ராஜகோபுரம் மற்றும் அனைத்து விமான கும்பாபிஷேகமும், பின்னர் பரிவார தெய்வங்கள், மூலவருக்கு மகா கும்பாபிஷேகமும் நடைபெறுகின்றன.

கும்பாபிஷேகத்தை முன்னிட்டு காலை 7 மணி முதல் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்படவுள்ளது. விழாவுக்கான ஏற்பாடுகளை இந்து சமய அறநிலையத் துறையினர், விழாக் குழுவினர் செய்து வருகின்றனர்.

அரசுப் பள்ளியில் கலைத் திருவிழா

வெள்ளக்கோவில், செப். 4: வெள்ளக்கோவில் செம்மாண்டம்பாளையம் அரசு ஆரம்பப் பள்ளியில் கலைத் திருவிழா புதன்கிழமை நடைபெற்றது.

பள்ளிக் குழந்தைகளின் திறமைகளை ஊக்குவிக்கும் வகையில் கலைத் திருவிழா நடத்த வேண்டுமென தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. செம்மாண்டம்பாளையம் பள்ளியில் நடைபெற்ற கலைத் திருவிழாவுக்கு, பெற்றோர்- ஆசிரியர் சங்கத் தலைவர் ராஜேந்திரன் தலைமை வகித்தார். வெள்ளக்கோவில் வட்டார கல்வி அலுவலர் சிவகுமார் போட்டிகளைத் தொடங்கிவைத்தார். பெற்றோர்- ஆசிரியர் சங்க பொறுப்பாளர் கருணாகரன், தலைமையாசிரியர் பாலசிவகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

குழந்தைகளுக்கு திருக்குறள் ஒப்பித்தல், நடனம், பேச்சு, ஓவியம், பாடல் உள்ளிட்ட போட்டிகள் நடத்தப்பட்டன. ஆசிரியைகள் கவிதா, ரம்யா ஆகியோர் போட்டிகளை ஒருங்கிணைத்தனர். ஆசிரியர்கள் செல்வக்குமார், தேன்மொழி, கவிதா ஆகியோர் இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

நிழற்குடை திறப்பு...

திருப்பூர் சாந்தி திரையரங்கம் பேருந்து நிறுத்தம் அருகில் ரூ.10 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட புதிய பயணிகள் நிழற்குடையை புதன்கிழமை திறந்துவைத்த வடக்கு சட்டப் பேரவை உறுப்பினர் கே.என்.விஜயகுமார். உடன், துணை மேயர் ஆர்.பாலசுப்பிரமணியம், மண்டலத் தலைவர் கோவிந்தராஜ், அதிமுக நிர்வாகிகள் பி.கே.எம்.முத்து, ஹரிஹரசுதன் உள்ளிட்டோர்.

சூலூர் தனியார் கார் விற்பனை நிறுவனத்தில் தீ விபத்து

13 கார்கள் எரிந்து சேதம்

தீப்பற்றி எரியும் கார்கள்.

சூலூர், செப்.4: சூலூர் அருகே தனியார் கார் விற்பனை நிறுவனத்தில் புதன்கிழமை அதிகாலை ஏற்பட்ட தீ விபத்தில் 13 கார்கள் எரிந்து சேதமடைந்தன.

கோவை மாவட்டம், சூலூர் அருகே ரங்கநாதபுரம் திருச்சி சாலையில் சிவானந்தா காலனியைச் சேர்ந்த பிரவீன்குமார் என்பவருக்கு சொந்தமான கார் விற்பனை நிறுவனம் செயல்பட்டு வருகிறது. இந்த நிறுவனத்தில் ஊழியர்கள் வேலை முடிந்து வழக்கம்போல செவ்வாய்க்கிழமை மாலை நிறுவனத்தை மூடிவிட்டு சென்றனர்.

இந்த நிறுவனத்தில் புதிய கார்கள் மற்றும் பழுதுபார்க்க வந்த கார்கள் என மொத்தம் 60 கார்கள் நிறுத்திவைக்கப்பட்டிருந்தன. இரவு காவல் பணியில் பாலசுப்பிரமணியம் (58) இருந்தார். இந்நிலையில், புதன்கிழமை அதிகாலை 3 மணி அளவில் கார் பழுது பார்க்கும் பகுதியில் தீப்பற்றியது. பின்னர் தீ மளமளவென அங்கு நிறுத்தப்பட்டிருந்த கார்களுக்கும் பரவியது.

உடனடியாக அக்கம்பக்கத்தில் உள்ள நிறுவனங்களில் பணிபுரிவோர் வந்து தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர். சம்பவ இடத்துக்கு வந்த சூலூர் தீயணைப்பு மற்றும் மீட்புப் படையினர் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர். அப்போது கட்டடத்தின் மேற்கூரை தீயில் கருகி இடிந்து விழுந்தது.

இதையடுத்து, தீயணைப்பு வீரர்கள் சுமார் ஒரு மணி நேரம் போராடி தீயை கட்டுக்குள் கொண்டு வந்தனர். பின்னர் நிறுவனத்துக்குள் நிறுத்தப்பட்டிருந்த புதிய மற்றும் பழுது நீக்கம் செய்ய கொண்டுவரப்பட்ட கார்களை ஊழியர்கள் அப்புறப்படுத்தினர். இதில் பழுது நீக்கம் செய்ய கொண்டுவரப்பட்ட 13 கார்கள் தீயில் எரிந்து சேதமடைந்தன.

இந்த விபத்தில் கார்களை பழுது நீக்கும் பகுதி, கார் விற்பனை பிரிவு, உதிரிபாகங்கள் வைக்கும் அறை, கணினி அறை ஆகிய பகுதிகளில் தீ பரவியது.

மின் கசிவா அல்லது வேறு காரணங்களால் தீ விபத்து ஏற்பட்டதா என்பது குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது. மேலும், தடய அறிவியல் நிபுணர்கள் விபத்து நேரிட்ட பகுதியில் ஆய்வு மேற்கொண்டனர்.

சூலூர் சட்டப் பேரவை உறுப்பினர் வி.பி.கந்தசாமி தீ விபத்து ஏற்பட்ட நிறுவனத்தை பார்வையிட்டார். இந்த விபத்து குறித்து சூலூர் போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

ஆர்ப்பாட்டம்...

பழைய ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்தக் கோரி பல்லடம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன் புதன்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பல்லடம் ஊரக வளர்ச்சி முகமை ஊழியர்கள்.

230 கிலோ புகையிலை பொருள்கள் பறிமுதல்: மளிகைக் கடைக்காரர் கைது

திருப்பூர், செப். 4: திருப்பூரில் விற்பனைக்காக பதுக்கிவைக்கப்பட்டிருந்த 230 கிலோ தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருள்களை போலீஸார் பறிமுதல் செய்தனர். இது தொடர்பாக மளிகைக் கடைக்காரர் கைது செய்யப்பட்டார்.

திருப்பூர், அனுப்பர்பாளையம் காட்டன் மில் சாலையைச் சேர்ந்தவர் ராஜா (41). இவர் அப்பகுதியில் மளிகைக் கடை நடத்தி வருகிறார்.

இவரது கடையின் பின்புறம் கிடங்கு வைத்து, தமிழக அரசால் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருள்களை விற்பனை செய்து வருவதாக போலீஸாருக்கு ரகசியத் தகவல் கிடைத்தது.

இதையடுத்து மாநகர காவல் ஆணையர் எல்.லட்சுமி உத்தரவின்பேரில், அனுப்பர்பாளையம் போலீஸார், அவர் கடைக்கு பின்புறம் செயல்பட்டு வந்த கிடங்கில் ஆய்வு செய்தனர். அங்கு மூட்டை மூட்டையாக பதுக்கி வைக்கப்பட்டிருந்த 230 கிலோ புகையிலைப் பொருள்களைப் பறிமுதல் செய்ததுடன், ராஜாவையும் கைது செய்தனர்.

கர்நாடக மாநிலம், பெங்களூரில் இருந்து திருப்பூருக்கு கடத்தி கொண்டுவரப்பட்டு, இங்கு அதிக விலைக்கு புகையிலைப் பொருள்களை ராஜா விற்பனை செய்து வந்தது விசாரணையில் தெரியவந்தது.

IKF ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட்

IKF Home Finance

பிளாட் எண்.30/A, சர்வே எண்.83/1, மை ஹோம் டிவிட்சா, 11வது தளம், டயமண்ட் ஹில்ஸ், ரும்பினி அவென்யூ 400/220/132KV GIS துணை நிலையம் அருகில், APIIC ஹைதராபாத் நலேட்ஜ் சிட்டி, ராய்துர்க், ஹைதராபாத்-081. தொலைபேசி எண்: 040-23412083. www.ikfhomefinance.com

அசையா சொத்துகளின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

பிற்சேர்க்கை -IV-A [விதி 8(6) & 9(1) பார்க்க]

2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழ் மற்றும் அதற்குத் தொடர்புடைய 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்க விதிகள் 8(6) ஷரத்துகள் படி அசையா சொத்துகளின் விற்பனைக்கான E-ஏல விற்பனை அறிவிப்பு.

இதன் மூலம் பொது மக்களுக்கும், குறிப்பாக கடன்தாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்கள் அவர்களுக்கு அறிவிப்பு யாதெனில் ஈடு பெற்ற கடன் வழங்கியுள்ள **IKF ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட்** நிறுவனத்திடம் அடமானம்/ ஈடு வைக்கப்பட்டுள்ள இங்கே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துகள் அதிகாரபூர்வ அலுவலர், **IKF ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட்** அவர்களால் **(Possession) சுவாதீனம்** எடுத்துக் கொள்ளப்பட்டன. அந்தச் சொத்துகள், பின்வரும் அட்டவணையில் காணும் கடன்தாரர்களிடமிருந்து / ஜாமீன்தாரர்களிடமிருந்து **IKF ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட்**-க்குச் சேரவேண்டிய பின்வரும் கடன் பாக்கி மற்றும் வட்டி, செலவுகள், இதர கட்டணங்கள், செலவினங்கள் ஆகியன சேர்த்து வசூலிப்பதற்காக **"உள்ளது உள்ளவாறு, உள்ள இடத்தில் உள்ளவாறு, உள்ளதெல்லாம் உள்ளவாறு"** என்னும் அடிப்படையில் விற்கப்படும். கடன்தாரர் / ஜாமீன்தாரர், பாக்கித் தொகை, அசையா சொத்து குறு விவரம், தெரிந்த வில்லங்கம், சுவாதீன வகை, ரிசர்வ் விலை, EMD தொகை, ஏல தேதி மற்றும் நேரம் ஆகிய விவரங்கள் பின்வருமாறு:

கடன்தாரர் பெயர்: திரு. P.பிச்சைமுத்து, S/o. பட்டாணி, # 3/95, பிள்ளையார் கோவில் தெரு, சேரங்காடு, TC மார்க்கெட் அருகில், நல்லூர் திருப்பூர்- 641 604. **மேலும்:**# S.F.No. 457/4,5, மனை எண்.12, "அண்ணா நகர்", முத்தனம்பாளையம் (கி), திருப்பூர், திருப்பூர் - 641 606. **இணை கடன்தாரர் : திரு. பட்டாணி.K, S/o. கோரக்கன்,** # 3/95, 3வது தெரு, பிள்ளையார் கோவில் தெரு, சேரங்காடு, TC மார்க்கெட் அருகில், நல்லூர், திருப்பூர்- 641604. **ஜாமீன்தாரர்: திரு.முத்துமாரி.P. S/o. பட்டாணி,** # 3/95, பிள்ளையார் கோவில் தெரு, 3வது தெரு, சேரங்காடு, திருப்பூர் - 641604.

கடன் கணக்கு எண்.: LNCBR02019-200001414 — **கோரிக்கை அறிவிப்பு:** 14.03.2023

நிலுவைத் தொகை: ரூ.32,01,917/- (ரூபாய் முப்பத்திரண்டு லட்சத்து ஆயிரத்து தொள்ளாயிரத்து பதினேழு மட்டும்) 13.03.2023 அன்றுள்ளபடி மற்றும் வட்டி + செலவுகள் முதலியன.

அசையாச் சொத்து விவரம்

திருப்பூர் பதிவு மாவட்டம், திருப்பூர் இணை I துணைப் பதிவு மாவட்டம், திருப்பூர் தெற்கு தாலுக்கா, முத்தனம்பாளையம் கிராமம், SF எண்:457/4 புஞ்சை ஏக்கர் 1.67, SF.எண்: 457/5 புஞ்சை ஏக்கர் 0.33 , மொத்த புஞ்சை ஏக்கர் 2.00 நிலம் "அண்ணா நகர்" என்ற பெயரில் லே அவுட்டாக உருவாக்கப்பட்டது. அதில் மனை எண். 12 பின்வரும் எல்லைகள் மற்றும் அளவீடுகளுக்குள்:கிழக்கு மேற்கு லேஅவுட் சாலைக்கு **தெற்கு**, மனை எண்:23க்கு **வடக்கு**, மனை எண்:11க்கு **மேற்கு**, தெற்கு வடக்கு லேஅவுட் சாலைக்கு **கிழக்கு**. இதன் நடுவில்: இருபுறமும் கிழக்கு-மேற்கு-40 அடி, இருபுறமும் தெற்கு-வடக்கு- 40 அடி பரப்பளவு 1600 சதுர அடி அல்லது 148.64 ச.மீட்டர் நிலம் மற்றும் கட்டிடம் மற்றும் கதவுகள், ஜன்னல்கள், தண்ணீர் இணைப்பு, மின்சார இணைப்பு மற்றும் இரண்டு வைப்புத்தொகைகளுடன் மற்றும் லே அவுட் சாலைகள் மற்றும் பொதுவான பாதைகள் போன்றவற்றின் பயன்பாடு உரிமைகள் உட்பட.

ரிசர்வ் விலை ரூ.48,98,380/- EMD:ரூ.4,89,838/- ஏல அதிகரிப்பு:ரூ.15,000/-

மின்-ஏல தேதி: 07.10.2024, நேரம்: பகல் 12.00 - 01.00 மணி வரை

விற்பனை முடிவடையும் வரை ஏலம் தொடரும்போது ஒவ்வொரு ஏலத்திற்கும் 5 நிமிடங்கள் காலநீட்டிப்பு தொடர்ந்து அளிக்கப்படும்.

விவரங்கள் எதுவும் பெற அணுகவும்:	அதிகாரபூர்வ அலுவலர் : திரு.கோவிந்தராஜ், மொபைல்: 9894078466, திரு.காசிம் வலி ஷேக், மொபைல்: 94929 27472

KYC ஆவணங்களுடன் மற்றும் EMD உடன் ஏலத்திற்கான விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி:05.10.2024 மாலை 04:00 மணி வரை.

சொத்து ஆய்வு செய்யும் தேதி:04.10.2024 அன்று அல்லது அதற்கு முன் எந்த வேலை நாளிலும் மாலை 5:00 மணி வரை முன் அனுமதியுடன் பார்வையிடலாம்.

விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்: (1) ஏலத்தில் ஈடுபடும் ஏலதாரர், EMD வைப்புத் தொகைக்கான ஆதாரம், UTR எண் போன்றவற்றுடன் மின்-ஏலத்தில் பங்கேற்பதற்கான கோரிக்கைக் கடிதம், (i) அடையாளச் சான்று (KYC) அதாவது அடையாள அட்டை (ID), ஓட்டுநர் உரிமம்/ கடவுச்சீட்டு போன்றவற்றின் சுய-சான்றளிக்கப்பட்ட நகல்களுடன் (ii) தற்போதைய முகவரி- தகவல் தொடர்புச் சான்று, (iii) ஏலதாரர் PAN அட்டை (iv) செல்லுபடியாகும் மின்னஞ்சல் ID (v) தொடர்பு எண் (vi) அசல் ஆவணங்களின் ஸ்கேன் செய்யப்பட்ட நகல்களுடன் சமர்ப்பிக்க வேண்டிய மின்னஞ்சல் முகவரி: Recovery@ikfhomefinance.com மற்றும் அலுவலக முகவரி : IKF ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட், கார்ப்பரேட் அலுவலகம்: IKF Home Finance Limited # My Home Twitza, 11th Floor, M Hotel, HITEC City Main Road, B/S Transco Substation, Raidurg, Hyderabad, Telangana- 500081. **(2) EMD தொகை விவரங்கள்: IKF Home Finance Limited என்ற பெயரில் பின்வரும் விவரங்கள்படி RTGS/ NEFT மூலம் செலுத்த வேண்டும். கணக்கு விவரங்கள் A/c No.:11520200014177, IFSC: FDRL0001152, Bank Name: The Federal Bank Limited, Branch: Vijayawada- 520 002. (3)** மேலும் விவரங்களுக்கு ஏலதாரர்கள் வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட சேவை வழங்குநரான **M/s C1 India Pvt Ltd** அவர்களைத் தொடர்பு கொள்ளலாம். முகவரி: Building 301, Udyog Vihar, Phase-2, Gulf Petrochem Building, Gurgaon, Haryana-122015, **https://www.bankeauctions.com,** E-ஏல தேதிக்கு முன்னதாக அணுகவும் **உதவி தொலைபேசி: +91-124-4302020/21/22/23/24, +91- 9700333933, மின்னஞ்சல்: support@bankeauctions.com மற்றும் telangana@c1india.com.**

நாள்:05.09.2024, இடம்:திருப்பூர் — ஒம் /- அதிகாரபூர்வ அலுவலர், IKF ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட்

இந்தியன் ஓவர்சீஸ் வங்கி

உடுமலைப்பேட்டை கிளை – எண்.63, ஸ்ரீ ஷண்முக பிரியா வித்யா சாகர் ரோடு, உடுமலைப்பேட்டை-642126. போன் : 89259 50534, மின்னஞ்சல் : iob0534@iob.

கேட்பு அறிவிப்பு

செக்யூரிடைஸேஷன் & ரீகன்ஸ்ட்ரக்ஷன் ஆஃப் பைனான்சியல் அஸெட்ஸ் & என்போர்ஸ்மெண்ட் ஆஃப் செக்யூரிடி இன்டரஸ்ட் ஆக்ட் 2002 (சர்பாஸி சட்டம்) பிரிவு 13(2), செக்யூரிடி இன்டரஸ்ட் (என்போர்ஸ்மெண்ட்) விதிகள் 2002ன் விதி 3(1) உடனான விதிகளின் கீழ்.

1. இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் கீழே கையொப்பமிட்ட, சர்பாஸி சட்டத்தின் கீழ் அதிகாரம் பெற்ற அலுவலர், சட்டப் பிரிவு 13(12) விதி 3 ன் கீழ் பெற்றுள்ள அதிகாரத்தைப் பிரயோகித்து, சட்டப்பிரிவு 13(2) ன் கீழான கேட்பு அறிவிப்பினை வழங்கியுள்ளார். அதில் கீழே பட்டியலில் குறிப்பிட்டுள்ள கடன்தாரர்கள்/பிணையமளித்தவர்கள்/உத்தரவாதமளித்தவர்கள் ஆகியோரை (இனி இவர்கள் 'கடன்தாரர்கள்' என அழைக்கப்படுவர்) கீழே தரப்பட்டுள்ள விபரப்படி, அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள செலுத்த வேண்டியுள்ள தொகையை அறிவிப்பு பெற்ற 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்தும்படி கோரியுள்ளார்.

2. மேற்படி அறிவிப்புகள் தபால் இலாகாவினரால் பட்டுவாடா செய்யப்படாது திரும்ப வந்து விட்டது / கடன்தாரர்கள்/பிணையமளித்தவர்கள்/உத்தரவாதமளித்தவர்களால் பெற்றுக் கொள்ளப்படவில்லை*. எனவே வங்கியானது மிக்க கவனத்துடன் இக்கேட்பு அறிவிப்பினை பிரசுரிக்க நேர்ந்துள்ளது. அதிகாரம் பெற்ற அலுவலர் மேற்படி சட்டத்தின்படி, கடன்தாரர்கள்/பிணையமளித்தவர்கள்/உத்தரவாதமளித்தவர்களின் கடைசியாகத் தெரிந்த விலாசங்களில் அவ்வறிவிப்பினை பதிந்து வைத்துள்ளார். இதன் நகல்கள் அதிகாரம் பெற்ற அலுவலரிடம் உள்ளபடியால், கடன்தாரர்கள்/பிணையமளித்தவர்கள்/உத்தரவாதமளித்தவர்கள் ஏதேனுமொரு வேலை நாளில் வழக்கமான அலுவல் நேரத்தில் மேற்படி நகல்களை அதிகாரம் பெற்ற அலுவலரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

3. இப்பின்னணியில் இக்கேட்பு அறிவிப்பின் மூலம், இந்த அறிவிப்பு பிரசுரமான 60 நாட்களுக்குள் பெற்றுள்ள கடன் மற்றும் பிற ஆவணங்களின் அடிப்படையில், கீழே குறிப்பிட்டுள்ள செலுத்த வேண்டியுள்ள தொகையை இந்தியன் ஓவர்சீஸ் வங்கிக்கு செலுத்திவிடும்படி கடன்தாரர்கள்/பிணையமளித்தவர்கள்/உத்தரவாதமளித்தவர்கள் மீண்டும் ஒருமுறை கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் கடனை திருப்பிச் செலுத்துதல் தொடர்பாக, கீழே கொடுக்கப்பட்டுள்ள சொத்தினை கடன் பத்திர பாதுகாப்பிற்காக இந்தியன் ஓவர்சீஸ் வங்கிக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள சம்பந்தப்பட்டவர்கள் அடமானம் செய்துள்ளார்கள்.

கடன்தாரர்கள்/ அடமானதாராகள் / உத்தரவாதமளித்தவர்கள் பெயர் மற்றும் விலாசம்	31.08.2024 வரையான மொத்த நிலுவைத் தொகை*	கேட்பு அறிவிப்பு தேதி
<u>கடன்தாரர்கள் :</u> **1. திரு.A.முருகேசன்,** கதவு எண்.3/319–A, R.கிருஷ்ணாபுரம், பூலாங்கிணறு அஞ்சல், உடுமலைப்பேட்டை தாலூகா–642122. **2. திருமதி.M.ஹேமலதா,** கதவு எண்.3/319–A, R.கிருஷ்ணாபுரம், பூலாங்கிணறு அஞ்சல், உடுமலைப்பேட்டை தாலூகா–642122. <u>**உத்தரவாதமளித்தவர் :**</u> **3. திருமதி.M.மல்லிகா,** க/பெ.A.முருகேசன், கதவு எண்.3/319–A, R.கிருஷ்ணாபுரம், பூலாங்கிணறு அஞ்சல், உடுமலைப்பேட்டை தாலூகா–642122.	**ரூ.11,91,689.41** (ரூபாய் பதினோறு லட்சத்து தொண்ணூற்று ஒராயிரத்து அறுநூற்று எண்பத்து ஒன்பது மற்றும் பைசா நாற்பத்து ஒன்று மட்டும்)	**31.08.2024**

<u>பிணையச் சொத்துக்கள் விபரம் : பாதுகாப்பின் தன்மை : பிணையம்.</u> A.முருகேசன் மனைவி திருமதி.M.மல்லிகா பெயரில் உடுமலைப்பேட்டை தாலூகா, பூலாங்கிணறு அஞ்சல், ராகல்பாவி கிராமம், R.கிருஷ்ணாபுரத்தில் க.ச.எண்.209/11, கதவு எண்.3/319–Aல் உள்ள 874 சதுர அடி விஸ்தீரண நிலம் மற்றும் குடியிருப்புக் கட்டிடம் சேர்ந்த சொத்தின் **<u>எல்லைகள் :</u>** கிழக்கு : தென்வடல் வீதி, மேற்கு : முத்துசாமியின் இடம், வடக்கு : நல்லமுத்துவின் மற்றொரு வீடு மற்றும் இடம், தெற்கு : கார்த்திகேயனின் இடம்.

*மேலும் ஒப்பந்தப் பின் வட்டி, ஓவர்டிராப்ட் வட்டியுடன் மேற்குறிப்பிட்ட தேதியிலிருந்து தொகை திரும்பச் செலுத்தும் நாள் வரையிலானது.

4. மேற்கூறியபடி இந்தியன் ஓவர்சீஸ் வங்கி–க்கு திருப்பிச் செலுத்தத் தவறும்பட்சத்தில் கடன்தாரர்கள்/பிணையமளித்தவர்கள்/உத்தரவாதமளித்தவர்கள் மீது இச்சட்டப்பிரிவு 13(4)ன் கீழ் மற்றும் அதற்குப் பொருத்தமான ஏனைய விதிகளின் அடிப்படையில் மேற்படி பிணையச் சொத்திற்கு/அசையும் மற்றும் அசையாச் சொத்திற்கு எதிராக இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் மூலம் நடவடிக்கை தொடரப்படுவதோடு, அதற்குண்டான செலவுகளுக்கும், விளைவுகளுக்கும் சம்பந்தப்பட்ட கடன்தாரர்கள்/பிணையமளித்தவர்கள்/உத்தரவாதமளித்தவர்கள் ஆகியோரே பொறுப்பு.

5. பிணையமாக்கப்பட்ட சொத்துக்களை மீட்பதில் கால அவகாசத்தைக் கருத்தில் கொள்ளும்படி, சட்டத்தின் பிரிவு 13(8)க்கு கடன்தாரர்கள்/பிணையமளித்தவர்கள்/உத்தரவாதமளித்தவர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

6. மேற்படி கடன்தாரர்கள்/பிணையமளித்தவர்கள்/உத்தரவாதமளித்தவர்கள் மேலே குறிப்பிட்டுள்ள சொத்தினை இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் எழுத்து மூல முன்னிசைவு இல்லாமல் கிரையமோ, குத்தகையோ அல்லது வேறு எந்த வகையிலோ உரிமை மாற்றம் செய்ய மேற்படி சட்டம் தடை செய்கிறது. இதை யாதொருவர் மீறினாலோ அல்லது மீறத் தூண்டினாலோ மேற்படி சட்டத்தின்/விதியின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும். சட்டப்பிரிவு 29 ன் கீழ் சிறைத்தண்டனையோ மற்றும்/அல்லது அபராதமோ விதிக்கப்படும்.

ஒம்/–

இடம் : உடுமலைப்பேட்டை — அதிகாரம் பெற்ற அலுவலர்

தேதி : 31.08.2024 — இந்தியன் ஓவர்சீஸ் வங்கி

தமிழ்நாடு கிராம வங்கி

(இந்தியன் வங்கி சார்புடைய அரசு வங்கி)

மண்டல அலுவலகம் 1951, PPTS Towers, முதல் தளம், ராமநாதபுரம், கோவை – 641 045

நகை ஏல அறிவிப்பு

திருப்பூர் மாவட்டத்தில் கீழ்கண்ட ஊர்களில் உள்ள எங்களது கிளைகளில் கீழ்கண்ட நபர்கள் தங்க நகைகளை அடமானம் வைத்து கடன் பெற்று இதுநாள் வரை கடனை திருப்பி செலுத்தாமல் சாதாரண மற்றும் பதிவு தபால் மூலமும் இதுபற்றி தகவல் தெரிவித்தும் நகைகளை மீட்கவில்லை. ஆகவே இந்த விளம்பரம் கண்டவுடன் அசல், வட்டி, தபால், விளம்பரச் செலவுகள் சேர்த்து பணத்தை செலுத்தி நகைகளை மீட்டுக் கொள்ளவும். தவறும் பட்சத்தில் **25.09.2024–ம் தேதி மதியம் 3.00 மணியளவில்** அந்தந்த வங்கி கிளையில் நகை ஏலம் விடப்படும். மனுதாரர் இறந்து இருந்தால் அன்னாரது வாரிசுதாரர்களுக்கும், வெளியூர் மற்றும் வெளிநாடு சென்ற கடன்தாரர்களுக்கும் தபால் கிடைக்க பெறாத நபர்களுக்கும் இந்த அறிவிப்பு பொருந்தும். ஏலத் தொகை கடன் நிலுவை தொகைக்கு குறைவாக இருந்தால் மீதி தொகையை வசூலிக்க சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும். ஏலத்தொகை கடன் நிலுவை தொகையை விட அதிகமாக இருந்தால் கடன்தாரரிடம் திருப்பி அளிக்கப்படும் அல்லது வேறு தவணை தவறிய அவரது கடன்களுக்கு வரவு வைக்கப்படும். ஏலத்தை மறு அறிவிப்பு இன்றி ஒத்திவைக்கவோ, ஏலத்தேதியை மாற்றவோ அல்லது ரத்து செய்யவோ வங்கிக்கு அதிகாரம் உண்டு.

எண்	கணக்கு எண் & கடன் தேதி (DD/MM/YYYY)	பெயர் & முகவரி	கடன் தொகை	மொத்த எடை கிராமில்
		கொமரலிங்கம் கிளை – செல் : 8300077150		
1	10185431805 3/4/2023	**குப்புசாமி A** 14, வள்ளுவர் தெரு, சாமராயப்பட்டி, கொமரலிங்கம், மடத்துக்குளம் (TK), திருப்பூர் (DT) - 642204	97000	30.8
2	10190096367 30/5/2023	**குப்புசாமி A** 14, வள்ளுவர் தெரு, சாமராயப்பட்டி, கொமரலிங்கம், மடத்துக்குளம் (TK), திருப்பூர் (DT) - 642204	103000	27.6
		திருப்பூர் கிளை – செல் : 83000 77122		
3	10187895072 4/5/2023	**A ஷேக்** த/பெ.அஜ்மீர் கான், எண்.60, VSA நகர், விஜயபுரம் 2வது தெரு, திருப்பூர் - 641606	193000	55.7
4	10188787372 15/5/2023	**E கிருஷ்ணமூர்த்தி** த/பெ.ஈஸ்வரன், எண். 4, காமராஜ் நகர், 2வது தெரு, குமரநந்தபுரம், திருப்பூர் - 641604	93500	23.3
5	10194777434 19/07/2023	**V தமிழ்செல்வி** க/பெ.விஜயகுமார், 1/393, ராதா நகர், பார்வதி மளிகை அருகில், திருப்பூர் – 641607	50000	16.6
		வெள்ளகோவில் கிளை – செல் : 8300077088		
6	10184080594 16/3/2023	**சக்திவேல் K** 191, PKPC நகர், வெள்ளகோவில், திருப்பூர் - 638111	117000	31.9
7	10184081587 16/3/2023	**சக்திவேல் K** 191, PKPC நகர், வெள்ளகோவில், திருப்பூர் - 638111	151000	47.5
		காங்கயம் கிளை – செல் : 8300077167		
8	10188341124 10/5/2023	**பாலசுப்பிரமணியம் A** எண்.3, கோர்ட் தெரு, தாராபுரம் ரோடு, காங்கயம், திருப்பூர் – 638701	40000	11
		மடத்துக்குளம் கிளை – செல் : 8300077192		
9	10194218987 13/7/2023	**நபீசா சேக் முஸ்தபா** 4/46, விநாயகர் கோவில் தெரு, திவான்சா PH, அம்பராம்பாளையம், கோயமுத்தூர் – 642103	160000	49.8
10	10195853224 31/7/2023	**சுலோச்சனா S** க/பெ.சிவானந்தம், மடத்துக்குளம் (TK), திருப்பூர் – 642113	31000	9.5
		தளி கிளை – செல் : 8300077132		
11	10188793261 15/5/2023	**திருமூர்த்தி S** எண்.1, திருமூர்த்தி நகர் தெரு, தளி, உடுமலைப்பேட்டை (TK) – 642112	82500	20

மண்டல மேலாளர், கோயம்புத்தூர்

பாங்க் ஆஃப் இந்தியா Bank of India BOI

கோயமுத்தூர் மண்டலம் R.S.புரம் கிளை, எண்.322, D.B. ரோடு, கோயமுத்தூர் – 641 002, போன் : 0422–2475205, 2475197. மின்னஞ்சல் : RSPuram.Coimbatore@bankofindia.co.in

சுவாதீன அறிவிப்பு

[விதி–8(1)] (அசையாச் சொத்திற்காக)

2002–ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை பத்திரப்படுத்துதல், நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்ட ஷரத்துக்களின்படி பிரிவு 13(2)–ன் கீழ் விதி 3–ன் படி **பாங்க் ஆப் இந்தியா, R.S.புரம் கிளை, கோயமுத்தூர் மண்டலத்தின்** அங்கீகரிக்கப்பட்ட அலுவலரால் இவ்வங்கியிலிருந்து கடன்பெற்ற **<u>கடன்தாரர் :</u> திரு.கதிர்வேலு.K (உரிமையாளர் : M/s.SKD வீவிங், கடன்தாரர் மற்றும் அடமானதாரர்),** 2/396, பண்ணைக்கார் தோட்டம், சுக்காம்பாளையம் அஞ்சல், பல்லடம் பிளாக், சுக்காம்பாளையம் கிராமம், திருப்பூர் – 641 662 என்பவர் திருப்பிச் செலுத்த வேண்டிய கேட்பு ஓலையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை **ரூ.88,38,976.95 – ஐ மற்றும் 30.03.2023 தேதியிலிருந்து** சேர்க்கப்பட வேண்டிய வட்டி சேர்த்து **01.11.2023** நாளிட்ட கேட்பு ஓலை பெற்றுக் கொண்ட தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் திரும்பச் செலுத்துமாறு பணிக்கப்பட்டது. கடன்தாரர்கள் மேற்கண்ட முழு தொகையினை செலுத்தத் தவறியதால் மேற்கண்ட சட்ட விதிகளின் 13(4) மற்றும் விதி 8ன் கீழ் **30.08.2024**ம் தேதி, கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தினை கீழே கையொப்பமிட்டவர் வங்கியின் சார்பாக சுவாதீனம் செய்து உள்ளார் என்பதை கடன்தாரர் மற்றும் பொது மக்களுக்கும் இதன் மூலம் அறிவிக்கிறார்.

குறிப்பாக கடன்தாரர் மற்றும் அடமானதாரர், சார்–கடன்தாரர், பொதுமக்கள் இந்தச் சொத்து குறித்து எந்த தொடர்பும் வைத்துக் கொள்ளக் கூடாது என்று எச்சரிக்கப்படுகிறது. அவ்வாறு மேற்கொண்டால் **பாங்க் ஆப் இந்தியாவுக்கு, ரூ.88,38,976.95 – ஐ மற்றும் 30.03.2023 தேதியிலிருந்து** சேர்க்கப்பட வேண்டிய வட்டி மற்றும் பிற கட்டணங்கள், செலவுகள் சேர்த்து செலுத்த வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உட்படும் என இதன் மூலம் அறிவிக்கிறார்.

பிணையமாக்கப்பட்ட சொத்துக்களை மீட்பதில் கால அவகாசத்தைக் கருத்தில் கொள்ளும்படி, சட்டத்தின் பிரிவு 13(8)க்கு கடன் வாங்கியவர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

(கேட்பு ஓலை பெறப்பட்ட பின் மேற்சொன்ன நிலுவைத் தொகைக்காக, தொகை ஏதும் செலுத்தியிருப்பின் கணக்கு நேர்செய்யும் போது/முடிக்கும்போது கருத்தில் கொள்ளப்படும்).

<u>அசையா சொத்து விபரம்</u>

சார் பிணையத்திற்குள்ளான நிலம் மற்றும் கதவு எண்.2/396 கட்டிடம் அமைந்த, திருப்பூர் பதிவு மாவட்டம், பல்லடம் சார் பதிவு அலுவலகம், பல்லடம் தாலூகா, பல்லடம், செம்மிபாளையம் கிராமம், சர்வே எண்.5, உட்பிரிவு எண்.5/4, பண்ணைக்கார தோட்டம் விலாசத்தில் அமைந்துள்ளது. **<u>சொத்து விபரம் :</u>** 1 ஏக்கர் நிலம், அங்கு கட்டப்பட்ட கட்டிடம், மின்சாரம் மற்றும் குடிநீர் இணைப்புடன், பொது ரோடுகளில் உபயோக உரிமை மற்றும் அங்குள்ள பிற பொது உரிமைகளுடன். **<u>இதன் எல்லைகள் விபரம் :</u>** பணிக்கம்பட்டி கிராம எல்லைக்கு வடக்கு, கந்தசாமி தக்க வைத்திருந்த சர்வே எண்.5/4 ல் உள்ள சொத்துக்குத் தெற்கு, சர்வே எண்.5/1 ல் உள்ள நிலத்துக்குக் கிழக்கு, கந்தசாமி தக்க வைத்திருந்த சர்வே எண்.5/4 ல் உள்ள சொத்துக்கு மேற்கு.

தேதி : 30.08.2024 — அதிகாரம் பெற்ற அலுவலர்

இடம் : R.S.புரம் — பேங்க் ஆப் இந்தியா